செய்தி வெளியீடு எண் : 791 நாள்: 03.11.2009

# பாடப்புத்தகங்கள் அச்சிட்டு விநியோகம் செய்வதில் எந்தவிதமான பின்னடைவும் ஏற்படாது! பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு!

பள்ளிக் கல்வியில் 1 முதல் 12ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களைத் தயாரித்து அச்சிட்டு கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிகள் திறக்கும் நாளன்றே மாணவர்கள் கையில் பாடநூல்கள் இருக்கும்வண்ணம் செய்யும் பணியினைத் தமிழ்நாடு பாடநூல் கழகம் செய்து வருகிறது.

2010–2011ஆம் கல்வி ஆண்டிற்குரிய பாடநூல்கள் அச்சடிக்கும் பணி பாடநூல் கழகத்தால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2 முதல் 5 மற்றும் 7 முதல் 12 வகுப்புகளுக்குத் தேவைப்படும் 6 கோடியே 43 இலட்சம் பாடநூல்களில் 2 கோடியே 80 இலட்சம் பாடநூல்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு இருப்பில் உள்ளன. எஞ்சியுள்ள 3 கோடியே 63 இலட்சம் பாடநூல்கள் 2010 ஜுன் முதல் தேதிக்குள் விநியோகம் செய்வதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வரப்படுகின்றன. தற்போது பாடநூல் கழகப்பணியை மேற்கொள்ளும் தனியார் அச்சகங்கள் தவிர அரசு அச்சகங்கள் மற்றும் கூட்டுறவுத் துறையில் உள்ள அச்சகங்களும் இப்பாடநூல்கள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட உள்ளன. மேலும், பல்வேறு மாநிலங்களில் உள்ள தனியார் அச்சகங்களையும் இப்பணியில் ஈடுபடுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

சமச்சீர் கல்வியில் 1ம் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்புகளுக்குத் தேவையான சுமார் 1 கோடி பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தி உரிய காலத்தில் வழங்கிட அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. இப்புத்தகங்களை அச்சிடுவதற்கு நவீன வசதியுள்ள அச்சகங்களை சேர்க்க (CTP இயந்திர வசதியுள்ள) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜுன் 2010ல் பள்ளிகள் திறக்கும் நாளன்று அனைத்து மாணவர்களுக்கும் தேவையான பாடநூல்கள் அனைத்தும் வழங்கப்படும்.

எனவே, சமச்சீர் கல்விக்குத் தேவையான பாடநூல்களை உரிய நேரத்தில் விநியோகம் செய்வதிலோ; மற்ற வகுப்புகளுக்குத் தேவையான பாடநூல்களை உரிய நேரத்தில் விநியோகம் செய்வதிலோ எந்தவிதமான பின்னடைவும் ஏற்படாது. ''தினமலர்'' நாளேடு வெளியிட்டுள்ள செய்தி திசைதிருப்பிக் குழப்பம் ஏற்படுத்தும் செய்தி என்பதால் அதை யாரும் நம்பவேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கிறது.

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.